# விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல்

**நாடளாவிய ரீதியில் வெற்றிடமாக நிலவும் மேலதிக மாவட்டச் செயலாளர் பதவிகளுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுத்தல்.**

01 <u>விண்ணப்பங்களை அனுப்புதல்</u>

I. வெற்றிடமாக உள்ள மேலதிக மாவட்டச் செயலாளர் பதவிகளுக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இல் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

II. 2023.06.18 ஆந் திகதிக்கு வெற்றிட எண்ணிக்கை 06 ஆகக் காணப்படுவதோடு அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வெற்றிடங்கள் தொடர்பான ஆவண இணைப்பு 01 ஆக இணைக்கப்பட்டுள்ளது.)

III. வெற்றிடமாகவுள்ள மேலதிக மாவட்டச் செயலாளர் பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தரம் I இல் உத்தியோகத்தர்கள் காணப்படாத சந்தர்ப்பங்களில், இலங்கை நிர்வாக சேவையில் திருப்திகரமான மற்றும் முனைப்புடனான 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள ( 2015.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள) II ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை அவ்வெற்றிடப் பதவிகளுக்கு முழு நேர அடிப்படையில் கடமையாற்றும் வகையில் நியமனம் செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படுவார்கள்.

முழு நேர அடிப்படையில் கடமைகளைச் செய்ய நியமிக்கப்படும் அதிகாரிகள் அப்பதவியில் நியமிக்கப்படுவது அதிகபட்சம் ஒரு வருட காலத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படுவார்கள் என்பதோடு, அந்த காலத்தை நீடிப்பது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதி 121 இன் படி செய்யப்படும்.

IV. இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் இணைப்பு 02 இன் படி தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை உரிய வகையில் நிரப்பி செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நில மெதுர, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு தமது நிறுவனத் தலைவரின் ஊடாக 2023.07.21 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதியை 2023.07.18 ஆந் திகதிக்கு முன்னர் distaddivisionnew@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

V. காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**02. விண்ணப்பதாரியின் தகைமைகள்**

விண்ணப்பித்திருக்கும் உத்தியோகத்தர்களின் சேவை மூப்புநிலைக்கு மேலதிகமாக, பின்வரும் தகைமைகளையும் முழுமைப்படுத்தியிருத்தல் தொடர்பான விசேட கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.1 மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவை அனுபவம்**

I. மாவட்ட / பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள் பற்றி நன்கு அறிந்திருத்தல்

II. பட்டப்பின் பட்டப் பாடநெறியை அல்லது அதனுடன் தொடர்புடைய கல்வித் தகைமைகளை பயின்றிருத்தல்

**2.2 கல்வி / தொழிற் தகைமைகள்/மொழித் தேர்ச்சி**

I. பட்டப்பின் பட்டம்
II. பட்டப்பின் பட்ட டிப்ளோமா
III. Attorney at Law, CIMA, Chartered Accountancy, P.M.P, BSC, ACS அல்லது பிற சமனான தகைமைகள்
IV. ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழித் தேர்ச்சி

**2.3 பாராட்டுச் சான்றிதழ்**

**2.4 உற்பத்தித்திறன் விருதுகள் மற்றும் நிலைகளுக்கு கிட்டியிருத்தல்.**

**2.5 ஆற்றல்கள்**

I. எண்ணக்கரு ரீதியான திறன்
II. ஒவ்வொருவருக்கிடையிலான தொடர்பாடல் திறன்கள்
III. தொழில்நுட்பத் திறன்

**2.6 நடத்தைத் திறன்**

I. தொடர்பாடல் திறன்கள்
II. தலைமைத்துவப் பண்புகள்
III. குழு ரீதியான வேலைத் திறன்கள்

**03. பதவிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கான முறைமை**

பதவிகளுக்கு தெரிவு செய்யும் போது புள்ளி வழங்கும் நடவடிக்கை 02 முக்கிய கட்டங்களின் கீழ் இடம்பெறும்.

**Iஆம் கட்டம்** - சுயவிபரக் கோவையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகைமைகளை கருத்திற் கொள்ளல் மற்றும் புள்ளி வழங்கல்

நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரிகள் உரிய படிவத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், பின்வரும் துறைகளைக் கவனத்திற் கொண்டு, புள்ளிகள் வழங்கப்படும்.

I. சேவை மூப்புநிலை

II. குறித்த தொழிற்துறையில் அனுபவம்

III. தொழிற் தகைமைகள்

விண்ணப்பங்கள் கோரும் முறைக்கு ஏற்ப சேவை மூப்புநிலை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் புள்ளி வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட வகுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**II ஆம் கட்டம்** - நேர்முகப் பரீட்சையின் மூலம் புள்ளி வழங்கல்

நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் போது தனது சேவைக் காலத்தினுள் நடைமுறைப்படுத்திய தனது ஆக்கங்கள் மற்றும் பெற்ற திறன்கள், பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவற்றினை நடைமுறை ரீதியாக செயற்படுத்தும் விதம் குறித்து முன்வைப்பு ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். (முன்வைப்பு Power Point ஊடகத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.) அதன்போது பின்வரும் தலைப்புக்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

I. உத்தியோகத்தரின் ஆற்றல்கள்

II. உத்தியோகத்தரின் நடத்தைத் திறன்

புள்ளி வழங்கும் முறை விவரமாக கீழே தரப்பட்டுள்ளது.

| தொடரிலக்கம் | புள்ளி வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் தேர்வளவுகள் | அதிகபட்ச புள்ளிகள் | மதிப்பீட்டுக்கு அடிப்படையாகும் முறைகள் |
|---|---|---|---|
| I | **சேவை மூப்புநிலை**<br>-I) ஆந் தரம் (I ஆந் தரத்துக்கு 15 புள்ளிகளும் 15 அத்தரத்தில் சேவையாற்றியுள்ள ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் 05 வருடங்களுக்கு<br>(5x 2 = 10 + 15) | 50 | |

| | | | |
|---|---|---|---|
| | -II) ஆந் தரம் (II ஆந் தரத்துக்கு 10 புள்ளிகளும் அத்தரத்தில் சேவையாற்றியுள்ள ஒரு வருடத்திற்கு 01 புள்ளிகள் வீதம் 06 வருடங்களுக்கு<br>(6 x 1 = 6 + 10)<br>-III) ஆந் தரம் (III ஆந் தரத்துக்கு 06 புள்ளிகளும் அத்தரத்தில் சேவையாற்றியுள்ள ஒரு வருடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம் 06 வருடங்களுக்கு<br>(6 x 0.5 = 3 + 6)<br>*I, II, III ஆகிய மூன்று தரங்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படும். | | விண்ணப்பப் படிவம் |
| II | **விசேட அடைவுகள் மற்றும் மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவை அனுபவம்**<br>-<u>- உள்நாட்டலுவல்கள் விடயப் பொறுப்பு அமைச்சின் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்</u><br>• சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்<br>(ஒரு வருடத்திற்கு 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 வருடங்களுக்கு)<br>• உதவிச் செயலாளர் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்<br>(ஒரு வருடத்திற்கு 1 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 வருடங்களுக்கு)<br><u>– மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவையாற்றியிருத்தல்</u><br>• மேலதிக மாவட்டச் செயலாளர் / பிரதேச செயலாளர் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்<br>(ஒரு வருடத்திற்கு 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 வருடங்களுக்கு)<br>• உதவி மாவட்டச் செயலாளர் / உதவி பிரதேச செயலாளர் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்<br>(ஒரு வருடத்திற்கு 1 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 வருடங்களுக்கு) | 10 | விண்ணப்பப் படிவம் |
| III | **கல்வி / தொழிற் தகைமைகள்**<br>*<u>கல்வித் தகைமைகள்</u>*<br>(பட்டப்பின் பட்டம் மற்றும் ஏனைய தகைமைகள்)<br>- பட்டப் பின் பட்டம் – (1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 புள்ளிகள்)<br>- பட்டப் பின் பட்ட டிப்ளோமா – (0.5 புள்ளி வீதம் அதிகபட்சம் 2 புள்ளிகள்)<br>*<u>தொழிற் தகைமைகள்</u>*<br>- Attorney at Law, CIMA, Chartered | 12 | விண்ணப்பப் படிவம் |

| | | | |
|---|---|---|---|
| | Accountancy, P.M.P, BSC, ACS அல்லது பிற சமமான தகைமைகள் ( 1 புள்ளி வீதம் அதிகபட்சம் 4 புள்ளிகள்)<br><br>-மொழித் தேர்ச்சி (தாய் மொழிக்கு மேலதிமான பிற மொழித் தேர்ச்சி)<br>சிங்களம், தமிழ், ஆங்கிலம் (1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 புள்ளிகள்) | | |
| IV | **பாராட்டுச் சான்றிதழ்**<br>- அமைச்சுக்கள் செயலாளரினால் வழங்கப்பட்ட பாராட்டுக்கள் சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 1.5 புள்ளிகள் வீதம்)<br>- திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 1 புள்ளி வீதம்)<br>- நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 0.5 புள்ளிகள் வீதம்)<br><br>* குறித்த மாதிரிப் படிவத்தினால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். | 05 | விண்ணப்பப் படிவம் |
| V | **உற்பத்தித்திறன் விருதுகள் அல்லது ஏனையவை முக்கிய அடைவுகள்**<br>- தேசிய மட்டத்தில் பிற விசேட நிலைகளை அடைந்திருத்தல் ( 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 புள்ளிகள்)<br>- மாகாண அல்லது மாவட்ட மட்டத்தில் நிலைகளை அடைந்திருத்தல் ( 1 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 புள்ளிகள்) | 05 | விண்ணப்பப் படிவம் |
| VI | **ஆற்றல்கள்**<br>- எண்ணக்கரு ரீதியான திறன்<br>- உள்ளக தொடர்பாடல் திறன்கள்<br>- தொழில்நுட்பத் திறன் | 09 | நேர்முகப் பரீட்சையில் முன்வைப்புகள் |
| VII | **நடத்தைத் திறன்**<br>- தொடர்பாடல் திறன்கள்<br>- தலைமைத்துவப் பண்புகள்<br>- குழு ரீதியான வேலைத் திறன்கள் | 09 | நேர்முகப் பரீட்சையில் முன்வைப்புகள் |
| VIII | **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**<br>அலுவலக காலப்பகுதியினுள் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக,<br>- முதல் அட்டவணையின் கீழ் தண்டனை பெற்றிருப்பின் புள்ளிகளும் 10<br>- சுருக்கமான ஒழுக்காற்றின் கீழ் எச்சரிக்கை தவிர்நத | 25- | விண்ணப்பப் படிவம் |

| | | | |
|---|---|---|---|
| | தண்டனை பெற்றிருப்பின் புள்ளிகளும் 08<br>- சுருக்கமான ஒழுக்காற்றின் கீழ் எச்சரிக்கைக்கு 01 புள்ளிகளும் 05<br>- பிழைகளைக் காண்பிப்பதற்கு ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம்<br>உழைத்த மொத்த புள்ளியின் எண்ணிக்கையிலிருந்து குறைக்கப்படும்<br>* காணி சம்பந்தமான கடமை மற்றும் உரிய விசாரணைகளின் மூலம் தண்டனை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் காணி நடவடிக்கைகள் தொடர்பில் புலனாய்வுகள் இடம்பெறும் உத்தியோகத்தர்கள் இந்த பதவிக்கு பரிந்துரைக்கப்பட மாட்டார்கள். | | |
| | **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

*குறிப்பு 01: மேற்படிப் புள்ளகளை வழங்கும் முறையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து" என்பதால் கருதுவது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வழங்கப்பட்ட சான்றிதழாகும்.*

*குறிப்பு 02: அவ்வாறே சகல பட்டப்பின் பட்டத் தகைமைகளையும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, பிற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தகைமைகளுக்கு இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.*

மேற் கூறப்பட்டவாறு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் தகைமைகளுக்கு ஏற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் சேவைத் தேவைப்பாட்டுக்கு ஏற்ப மேலதிக மாவட்டச் செயலாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

வெற்றிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் சமனான புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் செயலொழுங்கு விதிக் கோவையின் 80 ஆம் பிரிவின் படி பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

இது குறித்த மேலதிக தகவல்களைப் பெறுவதற்காயின், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின், உள்நாட்டலுவல்கள் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ( மாவட்ட நிர்வாகம்) அல்லது உதவிச் செயலாளர் ( மாவட்ட நிர்வாகம்) (தொலைபேசி இலக்கம் - அலுவலகம் 011-2050351, 011-2050354) இனை தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம் :கே.டீ.என். ரஞ்சித் அசோக

செயலாளர்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

திகதி: 18.06.2023